## யூலை – 12 – வியாழன்

**புனித குவால்பேட் அருளப்பர்**

**“பரிவு என்னும் கட்டுகளால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன்” (ஓசே 11:4)**

### முதல் வாசகம் : ஓசே 11 : 1– 4,8– 9

ஆண்டவர் கூறுவதுஇஸ்ரயேல் குழந்தையாய் இருந்தபோது அவன்மேல் அன்பு கூர்ந்தேன் எகிப்திலிருந்து என்மகனை அழைத்து வந்தேன்.எவ்வளவுக்கு நான் அவர்களை வருந்தி அழைத்தேனோ, அவ்வளவுக்கு என்னை விட்டுப் பிடிவாதமாய் விலகிப் போனார்கள் பாகால்களுக்குப் பலியிட்டார்கள், சிலைகளுக்குத் தூபம் காட்டினார்கள்.ஆனால் எப்ராயிமுக்கு நடைபயிற்றுவித்தது நானே. அவர்களைக் கையிலேந்தியதும் நானே் ஆயினும், அவர்களைக் குணமாக்கியது நானே என்பதை அவர்கள் உணராமற்போனார்கள்.பரிவு என்னும் கட்டுகளால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன் அவர்கள் கழுத்தின்மேல் இருந்த நுகத்தை அகற்றினேன் அவர்கள் பக்கம் சாய்ந்து உணவு ஊட்டினேன்.எப்ராயிமே! நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரயேலே! உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்? உன்னை எப்படி அதிமாவைப் போலாக்குவேன்? செபோயிமுக்குச் செய்ததுபோல் உனக்கும் செய்வேனோ? என் உள்ளம் அதை வெறுத்து ஒதுக்குகின்றது, என் இரக்கம் பொங்கி வழிகின்றது. என்சீற்றத்தின் கனலைக்கொட்டமாட்டேன் எப்ராயிமை அழிக்கத் திரும்பிவரமாட்டேன் நான் இறைவன், வெறும் மனிதனல்ல.நானே உங்கள் நடுவிலிருக்கும் தூயவர், ஆதலால், நான் நகர்க்கு எதிராக வரமாட்டேன்.

**பதில்பாடல் :** கடவுளே எம்மை மீட்குமாறு உம் முக ஒளியைக் காட்டியருளும்.

### நற்செய்தி : மத்தேயு 10 : 7 – 15

அக்காலத்தில் இயேசு தம்சீடர்களை நோக்கிக்கூறியது: “நீங்கள் சென்றுஇ ”விண்ணரசு நெருங்கிவந்துவிட்டது” எனப் பறைசாற்றுங்கள்.நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள். இறந்தோரை உயிர் பெற்றெழச்செய்யுங்கள். தொழுநோயாளரை நலமாக்குங்கள். பேய்களை ஓட்டுங்கள். கொடையாகப் பெற்றீர்கள். கொடையாகவே வழங்குங்கள்.பொன், வெள்ளி,செப்புக்காசு எதையும் உங்கள் இடைக்கச்சைகளில் வைத்துக்கொள்ள வேண்டாம்.பயணத்திற்காகப் பையோ, இரண்டு அங்கிகளோ, மிதியடிகளோ, கைத்தடியோ எடுத்துக்கொண்டு போகவேண்டாம். ஏனெனில் வேலையாள் தம் உணவுக்கு உரிமை உடையவரே. நீங்கள் எந்தநகருக்கோ ஊருக்கோ சென்றாலும் அங்கே உங்களை ஏற்கத்தகுதியுடையவர் யாரெனக்கேட்டறியுங்கள். அங்கிருந்து புறப்படும்வரை அவரோடு தங்கியிருங்கள்.அந்த வீட்டுக்குள் செல்லும்பொழுதே, வீட்டாருக்கு வாழ்த்துக்கூறுங்கள். வீட்டார் தகுதி உள்ளவராய் இருந்தால், நீங்கள் வாழ்த்திக்கூறிய அமைதி அவர்கள்மேல் தங்கட்டும் அவர்கள் தகுதியற்றவர் களாயிருந்தால் அது உங்களிடமே திரும்பிவரட்டும்.உங்களை எவராவது ஏற்றுக்கொள்ளாமலோ, நீங்கள் அறிவித்தவற்றுக்குச் செவிசாய்க்காமலோ இருந்தால் அவரது வீட்டை, அல்லது நகரைவிட்டு வெளியேறும்பொழுது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். தீர்ப்புநாளில் சோதோம் கொமோராப்பகுதிகளுக்குக் கிடைக்கும் தண்டனையைவிட அந்நகருக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்“ என்றார்.

**தியானம்:** விண்ணரசை நோக்கிய எமது பயணம் இலகுவானதல்ல. பல தடைகளை தாண்டித்தான் நாம் செல்ல வேண்டும். இஸ்ராயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்தில் வாழ்ந்தபோது பல துன்பங்களை அனுபவித்தார்கள். அவற்றில் இருந்து விடுபட வேண்டும் என்று கடவுளை நோக்கி கூக்குரல் இட்டு மன்றாடினார்கள். கடவுளும் அவர்களின் கண்ணீரை, வேதனையைக் கண்டு மனம் இரங்கினார். ஆனால் தமது சொந்த நாட்டை அடையுமுன்பே அவர்கள் கடவுளை விட்டு விலகிப் போனார்கள். இதனால் கடவுள் வேதனைப்பட்டதை இன்றைய முதல் வாசகத்தில் நாம் பார்க்கலாம். நாமும் பலதடவைகளில் கடவுளை வேதனைப் படுத்துகின்றோம். எமது சொல்லால், செயலால் கடவுளை விட்டு விலகி செல்கின்றோம். அன்புக் கயிறால் கட்டி வைத்துள்ளேன் எங்கிறார் ஆண்டவர். இவ்வாறே நற்செய்தியிலும் இறை அரசை அறிவிக்கும்படி சீடர்களை அனுப்புகின்றார். எல்லா வல்லமையையும் அவர்களுக்கு கொடுக்கின்றார். மக்கள் ஏற்காவிட்டால் காலில் உள்ள தூசியை தட்டி விடுங்கள் என்கிறார். ஏனெனில் தவறு அவர்களிடம் இல்லை. கேட்க முடியாத மக்களிடம் தான் உண்டு. எமது கடின மனம் பல தடவைகளில் எம்மை இறைவனிடம் இருந்து பிரித்து விடுகின்றது. இன்று இவ்வுலகம் அழிவை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. பட்டம், பதவிக்காக ஆசைப்படும் கூட்டம், பணத்திற்காக, ஆடம்பர வாழ்விற்காக ஆசைப்படும் கூட்டம், அன்புக்காக ஏங்கும் மக்கள், மனதளவில் பாதிக்கப்பட்டவர்கள், போதை சுகம் தரும் என்று நினைக்கும் இளம் சமுதாயம் என்று இதில் பல வகை. இவர்களின் மத்தியில் கடவுளின் அரசை கட்டி எழுப்புவது என்பது மிக சவாலான காரியமே! அன்று கிறிஸ்த்தவத்திற்காக உயிர் விட்டோர் பலர். இன்று தேவையற்ற காரணங்களிற்காக பலர் தமது உயிரை இழக்கின்றனர், அல்லது அழிக்கின்றனர். உயிர் விலை மதிப்பற்றுப் போய்விட்டது என்றே எண்ணத்தோன்றுகின்றது. கடவுளின் படைப்பை, அவரின் அன்பை மறந்து வாழ்ந்தால் நாமும் அழிவை நோக்கித்தான் செல்ல முடியும். எனவே அழியாத நிலை வாழ்வை நாடுவோம், எமது வாழ்வை மாற்றி அமைப்போம்.